## பணவீக்க விகிதம் குறைந்தது!

First Published : 15 Feb 2012 12:54:06 AM IST

புதுதில்லி, பிப்.14: மொத்த விலை குறியீட்டெண் அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்க விகிதம் கடந்த ஜனவரியில் எடுத்த புள்ளிவிவரப்படி 6.55% ஆக இருந்தது. கடந்த 26 மாதங்களிலேயே பணவீக்க விகிதம் இந்த அளவுக்குக் குறைந்திருப்பது இதுவே முதல் முறை.

பணவீக்க விகிதம் குறைந்திருப்பதால் மார்ச் 15 வாக்கில் நடைபெறவுள்ள ரிசர்வ் வங்கி நிர்வாகிகள் கூட்டத்தில் வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு வசூலிக்கப்படும் வட்டிவீதம் மேலும் குறைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் பிரகாசம் அடைந்துள்ளன.

உருளைக்கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்ததால் பணவீக்க விகிதம் இப்படிக் குறைந்திருக்கிறது. இது இல்லத்தரசிகளுக்கு மட்டும் அல்ல ஆட்சியாளர்களுக்கும் சற்றே நிம்மதியை அளிக்கும் தகவலாகும். மத்திய திட்டக்குழுவும் இந்தக் குறைப்பு குறித்து திருப்தி தெரிவித்திருக்கிறது.

ஆனால் உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 5 மாநிலங்களின் சட்டப் பேரவை பொதுத் தேர்தலுக்குப் பிறகு பெட்ரோல்,டீசல் விலை உயர்த்தப்பட்டால் இந்த நிம்மதி தொலைந்துவிடும் என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். சர்வதேசச் சந்தையில் விலை உயரும்போதெல்லாம் விலையை உயர்த்தியே தீர வேண்டியிருக்கிறது என்று கூறும் அரசு, மாநிலங்களில் தேர்தல் நடைபெறும் சமயங்களில் மட்டும் விலையை உயர்த்தாமல் வாக்குப் பதிவு முடியும் வரை காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு பணவீக்க விகிதம் 7% ஆக இருக்கும் என்று அரசு முன்னர் மதிப்பிட்டிருந்தது. இப்போது பணவீக்க விகிதம் குறைந்திருப்பதாகத் தகவல் வந்திருப்பதால் இந்த அளவு 6% ஆக நிலைபெறக்கூடும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்தார்.

மொத்தவிலை குறியீட்டெண் அடிப்படையிலான பணவீக்க விகிதம் 2011 டிசம்பர் இறுதியில் 7.47% ஆக இருந்தது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 9.47% ஆக இருந்தது என்பது நினைவுகூரத்தக்கது.

2009 நவம்பருக்குப் பிறகு பணவீக்க விகிதம் அளவு குறைந்திருப்பது இதுவே முதல் முறை. அப்போது பணவீக்க விகிதம் வெறும் 4.73% ஆக இருந்தது.

2012 மார்ச் இறுதியில் பணவீக்க விகிதம் 6% அளவுக்குக் குறைந்துவிடும் என்று எதிர்பார்ப்பதாக பிரணாப் முகர்ஜி நம்பிக்கையுடன் குறிப்பிட்டார். ஆனால் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் ஆலைவாய்ப் பண்டங்களின் விலையில் உயர்வு காணப்படுவது சற்றே கவலையைத் தருகிறது. இந்தப் பண்டங்களுக்குத்தான் குறியீட்டெண்ணில் 65% இடம் தரப்படுகிறது.

ஆலைவாய்ப் பண்டங்களைப் பொருத்தவரை பணவீக்க விகிதம் இப்போது 6.49% ஆக இருக்கிறது. ஆனால் கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 7.41% ஆக இருந்தது என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

உணவுப் பணவீக்கம் குறைந்திருந்தாலும் சமையல் எண்ணெய், பால், இறைச்சி ஆகியவற்றின் விலை உயர்ந்து வருவது கவலையைத் தருகிறது.

பெட்ரோல், டீசல், கெரசின், சமையல் கேஸ், மின்சாரம் உள்ளிட்ட எரிபொருள்களுக்கான பணவீக்க விகிதம் 14.21% ஆக இருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலத்தில் இது 14.91% ஆக இருந்தது.

வங்கிகள் தரும் கடனுக்கான வட்டி வீதம் உயர்த்தப்பட்டே வந்ததால் முதலீட்டாளர்களுக்குக் கடன் வாங்கவே அச்சமும் ஆர்வக்குறைவும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. எனவே வட்டி வீதத்தைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று தெரிகிறது.

இப்போதைய பணவீக்கக் குறைவு அதற்கு வழிவகுக்கும்.

## முல்லைப் பெரியாறு: இறுதி அறிக்கை தயாரிக்க ஆனந்த் குழு இன்று கூடுகிறது

First Published : 15 Feb 2012 12:00:00 AM IST

புது தில்லி, பிப். 14:முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக ஆய்வு செய்து வரும் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையிலான அதிகாரமளிக்கப்பட்ட குழு தில்லியில் புதன்கிழமை (பிப்ரவரி 15) கூடுகிறது. அணை தொடர்பாக இக்குழு நடத்தி வரும் ஆய்வின்அறிக்கை இம்மாதஇறுதியில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையிலான ஐவர் குழுவில், தமிழ்நாடு சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.ஆர். லக்ஷ்மணன், கேரள மாநிலம் சார்பில் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே.டி. தாமஸ், மத்திய நீர்வளத் துறை முன்னாள் செயலர் சி.டி. தட்டே, மத்திய நீர்வள முன்னாள் தலைமைப் பொறியாளர் டி.கே. மேத்தா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு கேரள மாநிலத்தில் இடுக்கி உள்ளிட்ட பகுதிகளில் நில அதிர்வு ஏற்பட்டது. இதனால்முல்லைப் பெரியாறு அணையில் விரிசல் ஏற்பட்டதாக கேரள அரசு தெரிவித்தது. அதைத் தொடர்ந்து அணை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின்

உத்தரவின்படி, தொழில்நுட்ப நிபுணர் குழு ஆய்வு செய்தது. அதன்அறிக்கை ஜனவரி 2-ம் தேதி அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், அதிகாரமளிக்கப்பட்ட குழு, ஜனவரி 24, 25 ஆகிய தேதிகளில் தில்லியில் கூடியது. அப்போது, அணை பாதுகாப்பு தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகள், தொழில்நுட்ப வல்லுநர்களின்அறிக்கையைஆனந்த் குழு பரிசீலித்தது.

இந்த ஆய்வின் அடிப்படையில் அக்குழுவின்அறிக்கை குறித்து ஆலோசனை நடத்த புதன்கிழமை (பிப்ரவரி 15) கூடுகிறது. இம்மாதஇறுதியில் தமதுஇறுதி அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் அளிக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**தொழிலாளர்கள் ஸ்டிரைக்: 1 லட்சம் ஏக்கர் கரும்பு வீணாகும் அபாயம்**

- ப. இசக்கி -

First Published : 15 Feb 2012 02:30:14 AM IST



எங்களுடன் வேலை செய்யும் கண்காணிப்பு அலுவலர்களுக்கு ரூ. 30 ஆயிரம் முதல் ரூ. 70 ஆயிரம் வரை ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் எங்களில் 35 ஆண்டுகள் வரை வேலை ச

சென்னை : தமிழ்நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் கடந்த 11-ம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால் சுமார் 1 லட்சம் ஏக்கர் கரும்பு வீணாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கரும்பு ஆலைகளில் அரவை நிறுத்தப்பட்டுள்ளதால், நாளொன்றுக்கு சுமார் ரூ. 8 கோடி வரை இழப்பு ஏற்பட்டு வருவதாக தொழிலாளர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் 41 சர்க்கரை ஆலைகள் உள்ளன. அவற்றில் 17 ஆலைகள் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள். அவற்றில் மொத்தம் 5,650 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆலைகள் தர்மபுரி, வேலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், நாமக்கல், திருவண்ணாமலை, திருப்பூர், மதுரை, தஞ்சை, பெரம்பலூர், திருவள்ளூர், கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ளன.

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிவரும் கண்காணிப்பு அலுவலர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று ஊதியத்தை தங்களுக்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்து தொழிலாளர்களும், ஊழியர்களும் கடந்த 11 ஆம் தேதி முதல் காலம்வரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான ஊதிய ஒப்பந்தம் கடந்த 31.3.2008-ல் முடிவடைந்தது. அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை 1.4.2008 முதல் வழங்க வேண்டும் என வலியுறுத்தி இவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். எனினும், பிரச்னைக்கு தீர்வு ஏற்படாததால் கடந்த ஆண்டு மார்ச்சில் தொழில் துறை, நிதித்துறை மற்றும் தொழிலாளர் துறை அதிகாரிகள் 5 பேரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. பின்னர் சட்டப் பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால் பிரச்னைக்கு தீர்வு ஏற்படவில்லை. எனவே, தொழிலாளர்களும், ஊழியர்களும் இப்போது வேலைநிறுத்தத்தை தொடங்கியுள்ளனர்.

""எங்களுடன் வேலை செய்யும் கண்காணிப்பு அலுவலர்களுக்கு ரூ. 30 ஆயிரம் முதல் ரூ. 70 ஆயிரம் வரை ஊதியம் வழங்கப்படுகிறது. ஆனால் எங்களில் 35 ஆண்டுகள் வரை வேலை செய்த தொழிலாளர்கள் ரூ. 13 ஆயிரத்தைக் கூட தாண்ட முடியவில்லை. அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம் அளித்தால் எங்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 18 ஆயிரம் முதல் ரூ. 30 ஆயிரம் வரை கூடுதல் ஊதியம் கிடைக்கும். அதற்காகத்தான் கடந்த 4 ஆண்டுகளாக போராடி வருகிறோம்'' என்றார் தேசிய சர்க்கரை தொழிலாளர் சம்மேளனத்தின் (ஐ.என்.டி.யூ.சி. சார்பு) மாநில கூடுதல் பொதுச்செயலர் எம். செல்வம்.

கரும்பு அரவை பருவமானது கடந்த அக்டோபரில் தொடங்கியது. மே வரை அரவைப் பணி நடைபெறும். இப்போது அரவையின் உச்சகட்டப் பருவம் ஆகும். வேலைநிறுத்தத்தால் கரும்பு வெட்டுவது தடைபட்டுள்ளது. வயல்வெளிகளில் கரும்பு வீணாகி வருகிறது.

விழிபிதுங்கும் விவசாயி: ""கரும்பை பயிரிட்ட 11 முதல் 12 மாதங்களில் வெட்டினால்தான் சர்க்கரைச் சத்து அரசு நிர்ணயித்துள்ள 9.5 சதவீதத்திற்கு குறையாமல் இருக்கும். விவசாயிகளும் டன்னுக்கு ரூ. 2 ஆயிரம் பெற முடியும். கரும்பை வெட்டுவது காலதாமதமாகி வெயில் காலம் தொடங்கி விட்டால், சர்க்கரை சத்து குறைந்து விவசாயிகளுக்கு கிடைக்கும் விலையும் குறையும். இந்த ஆண்டின் சர்க்கரைச் சத்து அளவை வைத்து அடுத்த ஆண்டுக்கான விலையை நிர்ணயம் செய்யும் முறை இருப்பதால், இந்த பாதிப்பு அடுத்த ஆண்டும் தொடரும். அடுத்த பயிரை சாகுபடி செய்வதிலும் காலதாமதம் ஏற்படும். கரும்பு வெட்டுக்கு ஆள் கிடைக்காது. இன்னும் சுமார் 1 லட்சம் ஏக்கரில் கரும்பு வெட்டப்படாமல் உள்ளது. எனவே, கடன் பெற்று கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் இந்த வேலைநிறுத்தத்தால் விழி பிதுங்கி நிற்கின்றனர்'' என்றார் தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஏ. சின்னச்சாமி.

தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்க இயலாது என நிதித்துறை ஆட்சேபம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனாலும், கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் அரசுத்துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற முதல் கட்ட

பேச்சுவார்த்தையில், கூடுதல் ஊதியத்தை ஈடுசெய்ய வேறு வகையில் பணப் பலன் வழங்கப்படும் என அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. அதை தொழிலாளர்கள் ஏற்கவில்லை. இதனால் போராட்டம் தொடர்கிறது.

அதிகாரிகள் கருத்து: ""கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகளில் 10 ஆலைகளில் மட்டுமே வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. அவற்றில் சுமார் 3,500 பேர் மட்டுமே வேலைநிறுத்தத்தில் பங்கேற்றுள்ளனர். தொழிலாளர்கள் படிப்படியாக வேலைக்கு திரும்பி வருகின்றனர். வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2-வது கட்ட பேச்சுவார்த்தை புதன்கிழமை நடைபெறும். அதில் தீர்வு ஏற்படும் என நம்புகிறோம்" என தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## கிராம அளவிலான பண்ணை குழுவிற்கு சாகுபடி பயிற்சி

First Published : 14 Feb 2012 12:53:41 PM IST

கரூர், பிப். 13: மண் மாதிரி, பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை குறித்து கிராம அளவிலான பண்ணை குழுவினருக்கு அண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

கரூர் உழவர் பயிற்சி நிலைய மேலாண் துணை இயக்குநர் மூலம் கிராம அளவிலான பண்ணை மகளிர் மற்றும் ஆண்களுக்கான பயிற்சி, தரகம்பட்டி வட்டாரம் சின்னதேவன்பட்டியில் அண்மையில் நடைபெற்றது.

மண் மாதிரிகள் எடுப்பதன் அவசியம், எடுக்கும் முறை, பயிர்களைத் தாக்கும் மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறை உள்ளிட்டவை குறித்து பயிற்சி மைய மேலாண்மை அலுவலர் மோகன்குமார் விளக்கினார். இந்தப் பயிற்சியில் 25 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

மேலும், பயிர்களுக்கு பொதுப் பரிந்துரைப்படி, உரமிடுதல் குறித்து துண்டுப் பிரசுரம் வழங்கப்பட்டது. உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் தங்கவேல் நன்றி கூறினார்.

## முட்டை விலை ஒரே நாளில் 10 காசுகள் உயர்வு

First Published : 14 Feb 2012 05:11:39 PM IST

நாமக்கல், பிப். 13: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை ஒரே நாளில் 10 காசுகள் உயர்த்தப்பட்டு 263 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டது. இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் திங்கள்கிழமை எடுக்கப்பட்டது.

கோடை காலம் தொடங்கியுள்ளதால் முட்டை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டலத்தில் சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு கோடி முட்டைகள் வரை கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆனால் கோடை கால தொடக்கம் காரணமாக சுமார் 85 லட்சம் முட்டைகள் வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகின்றன.

மேலும் வெளிமாநிலங்களில் முட்டையின் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் முட்டை விலை சற்று அதிகரித்து வருகிறது.

இதனால் திங்கள்கிழமை 253 காசுகளில் இருந்து 10 காசுகள் உயர்த்தப்பட்டு 263 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டைக் கோழி ரூ. 2 உயர்வு: கோடை காலம் தொடக்கம் காரணமாக முட்டை உற்பத்தி சிறிது பாதிக்கப்பட்டுள்ள நிலையில், முட்டைக் கோழியின் விலை திங்கள்கிழமை ரூ. 2 உயர்த்தப்பட்டு ரூ. 33 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## காலநிலை மாற்றம் எதிர்காலத்தில் விவசாய உற்பத்தியை பாதிக்குமா

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,00:00 IST




சமீபகாலத்தில் தர்மபுரி அருகிலுள்ள சோகத்தூர் பகுதியில் விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்து வருகின்றனர். இதில் வைரஸ் நோய் வந்ததால் சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இதனால்

விவசாயிகள் இந்த வருடம் பூமியில் இருக்கும் சொற்ப ஈரத்தை நம்பி கொண்டைக்கடலையை சாகுபடி செய்துள்ளனர். இதற்கு துணிவு ஏற்பட்டதற்குக் காரணம் யாதெனில் இப்பயிர் பூமியில் இருக்கும் ஈரத்தையும், பெய்யும் பனியின் உதவியாலும் வளர்ந்து மகசூல் கொடுக்கும் என்பதே. மேலும் இப்பயிர் பல சிறப்பியல்புகளை பெற்றுள்ளது.

குறைந்த செலவில் அதிக லாபத்தைத் தருகின்றது. வியாபாரிகள் சோகத்தூர் கடலையைத் தேடிப்பிடித்து நல்ல விலை கொடுத்து கொள்முதல் செய்கின்றனர்.

அரை கிலோ அளவு பச்சைக்கடலையை ஊறவைத்து மாடு, எருமைகளுக்கு கொடுத்தால் கர்ப்பப்பை வளர்ச்சி மூலம் கால்நடைகள் சினைப்பருவத்திற்கு விரைவாக வருகின்றன.

விவசாயி ஸ்ரீதரன் (வாணியர் தெரு, சோகத்தூர் அஞ்சல், தர்மபுரி) இரண்டு ஏக்கரில் கொண்டைக்கடலை சாகுபடி செய்துள்ளார். இப்பயிர் 90 நாட்கள் வயதினைக் கொண்டது. பூமியை டிராக்டர் கொண்டு மூன்று சால் உழவு செய்யப்படுகிறது. உழும் சமயம் ஒரு மூடை காம்ப்ளக்ஸ் உரம் இடப்படுகின்றது. வேலை ஆட்கள் வைத்து கடலை விதை பூமியில் விதைக்கப்படுகின்றது. விதையை விதைக்கும் முன் இரண்டு மணி நேரம் நீரில் ஊறவைத்து விதைக்கப்படுகிறது. செடி வளர்ந்தவுடன் 10 பெண் ஆட்களை வைத்து சுத்தமாக களை எடுக்கப் படுகிறது. பூமியில் இருக்கும் ஈரம் கொண்டைக்கடலைக்கு போதுமானதாக இல்லாவிட்டாலும் அந்த அளவு ஈரம் களைச்செடிகளுக்கு தேவையான அளவாக இருந்து செடிகள் அடர்த்தியாக வளர்ந்து விவசாயிக்கு களை எடுக்க அதிக ஆட்களை வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. செடி மேல் பனி ஈரம் இருக்கும் போது பயிர் பாதுகாப்பிற்காக பவுடர் மருந்து தூவப்படுகின்றது. பலன் கிட்டவில்லையெனில் எண்டோசல்பான் தெளிக்கப் படுகின்றது. ஒரு ஏக்கர் கொண்டைக்கடலை சாகுபடி செய்ய ரூ.10,320 செலவாகின்றது. விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ரூ.பை

டிராக்டர் செலவு (உழவு) 2,000.00

விதை கடலை 30 கிலோ 3,000.00

காம்ப்ளக்ஸ் ஒரு மூடை 720.00

விதைக்க செலவு 200.00

களை எடுக்க 1,200.00

பயிர் பாதுகாப்பு 1,400.00

அறுவடை 1,200.00

காய் அடித்து

கடலை எடுக்க 600.00

மொத்தம் 10,320.00

மேற்படி சாகுபடி செலவு முந்தைய வருடங்களைவிட இரண்டு மடங்காகும். விவசாயி தனது பயிர் அறுவடைக்காக காத்துக்கொண்டு இருக்கிறார். தனது பயிரில் நான்கு மூடைவரை மகசூல் கிடைக்குமென்று நினைத்துக்கொண்டு இருக்கின்றார். இந்த நான்கு மூடை கொண்டைக்கடலையை விற்பனை செய்தால் சுமார் ரூ.24,000 வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார். சாகுபடி செலவு ரூ.10,320 போக லாபம் ரூ.13,680 கிடைக்க வேண்டும். தற்போது கொண்டைக்கடலை பயிர் மட்டும் சோகத்தூர் பகுதியில் இங்கும் அங்கும் காணப்படுகிறது. விவசாயிகளுக்கு சாகுபடியில் லாபம் கிட்டும் போதுதான் வாய் திறந்து ஏதாவது பேசமுடியும். இருப்பினும் சூழ் நிலையைக்கண்டு பயப்படாமல் விவசாயி சாகுபடி செய்வது அவரது விடாமுயற்சியைக் காட்டுகின்றது.-எஸ்.எஸ்.நாகராஜன்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,00:00 IST

**மண், தாவரம், பயிர்களுக்கான கரிம ஊட்டச்சத்து**: "ஹியூமிக்காஸ்' - உழவர்களுக்கு உற்ற தோழன். பணப்பயிர்கள், தானியப் பயிர்கள், குறுகிய காலப்பயிர்கள், காய்கறி - பழத் தோட்டங்கள், காப்பி - தேயிலைத் தோட்டங்கள், வீட்டுத் தோட்டங்கள் ஆகிய அனைத்திற்கும் உபயோகிக்கலாம். இந்தியாவின் பெரிய அளவில் உற்பத்தியாளர்கள் விவசாய் - VIVASAI. மேலும் விபரங்களுக்கு SUMA Inc 0442815 2898/ 98401 48882.
**டீலர்**: சேலம், கிருஷ்ணகிரி, பெராசூர் - ராஜன் - 93666 39666. கோயம்புத்தூர் - ஜி.எம்.பிரபு - 98410 39733, திருநெல்வேலி, நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி - சூரியா - 89251 42537.

நபார்டு - SDC கிராமங்களில் புதிய கண்டுபிடிப்புக்கான நிதியம் - கிராமங்களின் துயர் நீக்க / விவசாயிகளின் உற்பத்தி திறனை பெருக்க, புதிய கண்டுபிடிப்பு, புதிய தொழில்நுட்பம், புத்தாக்க முயற்சி (innovative ideas / schemes) அல்லது தீர்வு, வேளாண் துறை, வேளாண் சாராத ஊரக வளர்ச்சித்துறை, நுண்கடன்துறையைச் சார்ந்த அவசியமான ஒரு பொருளாகவோ சேவையாகவோ அல்லது ஆய்வாகவோ கிராமங்களின் வறுமையைப்போக்கும் தீர்வாகவோ, வருவாயைப் பெருக்கும் வழியாகவோ, வேலைவாய்ப்பை அளிப்பதாகவோ அமையுமானால் அவற்றை எல்லாம் செயல்படுத்த நிதியுதவி அளிக்கிறது. NABARD -நபார்டு வழங்கும் நிதியுதவி

மென்கடனாகவோ, மானியமாகவோ இருக்கும். மேலும் விபரங்களுக்கு NABARD (நபார்டு), 48, உத்தமர் காந்திரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-34. போன்: 044-2830 4444, 2830 4428.

**விதை மூலம் சின்ன வெங்காயம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,00:00 IST



விதை மூலம் சாம்பார் வெங்காயம் நாற்று பாவி சாகுபடி செய்பவர்கள் கீழ்க்காணும் சிறப்பு விதிமுறைகளைக் கடைபிடித்து சிறப்பான மகசூல் எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **பசுந்தாள் உரப்பயிர்களும் வெங்காயமும்**: பசுந்தாள் உரப் பயிர்களை வளர்த்து மடக்கிவிடும் தொழில்நுட்பத்தால் வெங்கா யத்தில் தரமான கிழங்குகளைப் பெறமுடியும். இதற்கு வெங்காய நாற்றுவிடுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பே தக்கைப்பூண்டு அல்லது சணப்பு அல்லது சோயாபீன்ஸ் அல்லது கொத்தவரை விதைகளை ஏக்கர் ஒன்றுக்கு 20 கிலோ விதைத்து 50 நாட்களில் ரோட்டவேட்டர் கருவி கொண்டு இரண்டுமுறை உழவேண்டும். நிலம் நன்கு ஆறியபின் அந்த நிலத்தில் ஒரு மாத இடைவெளி விட்டு வெங்காய நாற்றுகளை நடவேண்டும். அதற்கு தகுந்தாற்போல் கணக்கிட்டு வெங்காய விதை பாவும் தேதியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக பசுந்தாள் உரமிட்டு வளம் கூட்டும் நிலத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 2 கிலோ சூடோமோனாஸ், 2 கிலோ டிரைக்கோ டெர்மா விரிடி, 5 கிலோ பாஸ்போபாக்டீரியா, 5 கிலோ அசோஸ்பைரில்லம் ஆகிய நுண்ணுயிரிகளை நன்கு மக்கிய மாட்டு எரு அல்லது மண்புழு உரம் 100 கிலோவுடன் உரநேர்த்தி செய்து பின் பாத்தி அமைத்தல் நலம்.

**உழவு மேலாண்மை**: வெங்காய விதை பாவி நாற்றங்காலுக்கு வயது 25 என்ற நிலையில் சாகுபடிக்குத் தேவையான நிலத்தை தேர்வுசெய்து இரண்டு மூன்று தடவை நன்கு உழவு செய்ய வேண்டும். ஏர் உழவு எனில் பதமான சூழலில் 4 உழவு போடவேண்டும். ஏழு கலப்பை அல்லது ஐந்து கலப்பை கொண்டு ஒரு வார இடைவெளியில் 2 தடவை உழுது கடைசியாக கொக்கி கொண்டு 2 உழவு போடுதல் அவசியம்.

**அடி உரம் மற்றும் உரமேலாண்மை**: அடி உரமிடுவதற்கு வாய்ப்பு உள்ளவர்கள் ஆட்டுக்கிடை மறிக்கலாம். தொழு எரு பயன்படுத்தும் பட்சத்தில் ஏக்கருக்கு 10 டன் இடலாம். கோழி எரு எனில் ஏக்கர் ஒன்றுக்கு 2 டன்னுக்கு மிகாமல் பயன்படுத்த வும். கோழி எரு பயன்படுத்தும் பட்சத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பே வாங்கி நிழலில் கொட்டி ஒரு டன் உரத்திற்கு 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் கலந்து வைத்து பின் பயன்படுத்துவது மிக நன்று. முடிந்தால் வாரம் ஒரு முறை நீர் தெளித்துவந்தால் நன்கு மக்கிய, தரமான கோழி எரு கிடைக்கும்.

**பாத்தி அமைத்தல்**: அனைத்து அடி உரங்களும் இட்டபின் 8" அல்லது 20 செ.மீ. அகலம் கொண்ட கீழ் பார்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**நடவு மேலாண்மை**: தகுதியான நாற்றுகள் 45 முதல் 50 நாட்களில் உருவாகும். அதிகபட்சமாக 60 தினங்களில் நாற்று நடவை முடிக்கவும். நாற்றுகளை நடவுக்கு முந்தைய தினம் நீர் பாய்ச்சி, பறித்து, நீள்-பதியம் (நெட்டுப் பதியம்) வைத்து மறுதினம் நடவு செய்ய வேண்டும். அன்றே பறித்து உடனுக்குடனும் நடலாம். முந்தைய தினம் நாற்றுகளை எடுத்து பதியன் வைத்துக் கொண்டால் தொய்வில்லாமல் நடவு செய்யலாம். பறித்து வைத்த நாற்றுகளை சிறு சிறு முடிகளாகக் கட்டி, நடவு செய்வதற்கு முன் சீராக நாற்றின் முன்பகுதியை பதமான அரிவாள் கொண்டு கீழே கட்டை ஒன்றை வைத்துக்கொண்டு தேவையான அளவு கச்சிதமாக ஒரு கைப்பட வெட்டி நடவு செய்ய வேண்டும். நாற்று முடியின் நுனியை கழுத்தைத் திருகி தாள்களைக் கசக்கி எறிவது எக்காரணம் கொண்டும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு செய்வதால் பாரின் இருபக்கம் நடும் நாற்றுகள் காற்றில் சாயாமல் உறுதியாக நிற்கும். நாற்று நடவும் விரைவாகச் செல்லும். எடுத்து வைத்துள்ள நாற்றுகளை 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் வாளியில் 20 கிராம் சூடோமோனாஸ், 20 கிராம் டிரைகோடெர்மா விரிடி, 20 கிராம் அசோஸ்பைரில்லம் மூன்றையும் ஒன்றாகக் கரைத்து நாற்றின் வேர்ப்பகுதியை கரைசலில் முக்கி நடுவது மிக மிக நன்று. நாற்றுகள் நோய் தவிர்த்து விரைவில் பச்சை பிடிக்க ஏதுவாக இருக்கும்.

**மேலும் விபரங்களுக்கு**: கண்மணி சந்திரசேகரன், 404, கண்மணி இயற்கை அங்காடி, ரயில்வே

நிலையம் எதிரில், பழனிப்பாதை, ஒட்டன்சத்திரம்-624 619.-கண்மணி சந்திரசேகரன், ஒட்டன்சத்திரம், 98659 63456.

**விவசாயிகள் குறை தீர் கூட்டம் 24ம் தேதிக்கு தள்ளிவைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,04:34 IST

கருத்தை பதிவு செய்ய

திருநெல்வேலி:விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 24ம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.வேளாண்மைத் துறை அட்மா விவசாயிகள் கருத்தரங்கம் அமைச்சர்கள் தலைமையில் வரும் 17ம் தேதி நடக்கிறது. இதனால் அன்று நடக்கவிருந்த மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 24ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது என்று கலெக்டர் செல்வராஜ் தெரிவித்தார்.

**விற்பனைக்கு வருகிறது 75 ஆயிரம் டன் மஞ்சள் : மாவட்டத்தில் அறுவடை பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,02:30 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், 12 ஆயிரத்து 600 ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் அறுவடை துவங்கியுள்ளது. அதன்மூலம், 75 ஆயிரம் டன் மஞ்சள் விற்பனைக்கு வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

மஞ்சள் உணவு பொருளாகவும், அழகு சாதனம் மற்றும் கிருமி நாசினியாகவும் பயன்பட்டு வருகிறது. தமிழக அளவில் மஞ்சள் சாகுபடியில் ஈரோடு மாவட்டம் முதன்மை பெற்றுள்ளது. 2010ல் மஞ்சள் குவிண்டால் 17 ஆயிரம் ரூபாய் வரை விற்றது. தங்கத்தை விட மஞ்சளுக்கு மவுசு அதிகமாக இருந்ததால், எட்டு மாத பயிரான மஞ்சள் சாகுபடி செய்ய விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

கடந்தாண்டு ஈரோடு மாவட்டத்தில், 11 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி நடந்தது. சாகுபடி நடந்து வரும்போது, மஞ்சள் விலை குறைய ஆரம்பித்தது. சாகுபடி நேரத்தில் மஞ்சள் குவிண்டால், 11 ஆயிரம் ரூபாய் என்றளவுக்கு குறைந்து விட்டது. அதனால், சாகுபடி குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருந்தாலும், கடந்தாண்டை விட இந்தாண்டு 1,300

ஹெக்டேர் அதிகரித்து, 12 ஆயிரத்து 600 ஹெக்டேர் பரப்பளவுக்கு மஞ்சள் சாகுபடி நடந்துள்ளது. மஞ்சள் அதிக உற்பத்தி, இருப்பு வைத்த மஞ்சள் என, விற்பனைக்கு குவிந்ததால், விலை மிகவும் சரிந்து குவிண்டால் மஞ்சள், 5,000 ரூபாய்க்கு விற்கிறது. இது மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளை மிகவும் கவலை கொள்ள வைத்தது. அதனால், மஞ்சள் அறுவடை சீஸன் துவங்கியும், மஞ்சளை அறுவடை செய்யாமல் ஓரிரு வாரம் தாமதமாக அறுவடை செய்யத் துவங்கியுள்ளனர்.
ஒரு ஹெக்டேரில் மஞ்சள் அறுவடை செய்தால், வேகவைத்து பாலிஷ் செய்த பிறகு(விற்பனைக்கு வரும் மஞ்சள்) ஆறு டன் கிடைக்கும். மாவட்டம் முழுவதும் அறுவடை செய்த பிறகு, 75 ஆயிரம் டன் மஞ்சள் விற்பனைக்கு வர வாய்ப்புள்ளது.
தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராபர்ட் வின்சென்ட் கூறியதாவது:
ஈரோடு மாவட்ட அளவில் காலிங்கராயன் பாசன பகுதிகளான ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி பகுதியில்தான் அதிகளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. மஞ்சள் ரகத்தில் பி.டி.எஸ்., 8, 10, பி.எஸ்.ஆர்., 1, 2 மற்றும் லோக்கல் ரகம் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது துவங்கியுள்ள அறுவடை, மார்ச்சில் நிறைவுறும்.
வயலிலேயே மஞ்சளை விட்டு வைக்கவும் கூடாது. திடீரென மழை பெய்தால், மஞ்சள் அழுக ஆரம்பித்து விடும். தொடர்ந்து மஞ்சளையே பயிரிடாமல், விவசாயிகள் மாற்று பயிர் பயிரிட வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**சொட்டுநீர் பாசனம்தோட்டகலைத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,01:08 IST

கருத்தை பதிவு செய்ய

கிணத்துக்கடவு:"கிணத்துக்கடவு பகுதி விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படவுள்ளது," என தோட்டக்கலைத் துறை கூறியுள்ளது.கிணத்துக்கடவு பகுதியில் உள்ள 50 எக்டர் நிலப்பரப்பில் வாழை, மரவள்ளி காய்கறிகள், மஞ்சள் பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கூட்டம் கிணத்துக்கடவு வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குனர் முகமது இக்பால் தலைமை வகித்தார். கூட்டத்தில், "சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கலாம். இதற்கு, விவசாயிகள் சிட்டா, அடங்கல், நான்கு பாஸ்போட் அளவு புகைப்படங்கள், தோட்ட வரைபடம், சிறு மற்றும் குறு விவசாயி என்பதற்கான கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட சான்று, நில உரிமை சான்று, ரேஷன் கார்டு ஒளி நகல் போன்றவைகளுடன், எந்த நிறுவனத்தின்

மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்கிறோம் என்பதை தேர்வு செய்து தோட்டகலைத்துறை அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்து சொட்டு நீர் பாசனம் அமைத்து கொள்ளலாம்' என்று கூறப்பட்டது.பிளோடெக் ஜெயின், கோத்தாரி, எல்.ஜி. நிறுவன அலுவலர்கள் மற்றும் தோட்டக்கலை அலுவலர், உதவி வேளாண் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாளர் பற்றாக்குறையால் விவசாயிகள் கடும் அவதி**
பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2012,02:08 IST

கருத்தை பதிவு செய்ய
தஞ்சாவூர்: தஞ்சை நெல்கொள்முதல் நிலையங்களில் காலிப்பணியிடம் நிரப்பப்படாமல் உள்ளதால் விவசாயிகள் கடும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். தஞ்சை மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்க நெல் கொள்முதல் பணியாளர்கள் கூட்டம், சங்க அலுவலகத்தில் நடந்தது. இதில், சங்க மாநில பொதுச்செயலாளர் சந்திரகுமார், மாவட்டத்தலைவர் ஞானசேகரன், துணைச்செயலாளர் தியாகராஜன், தஞ்சை பொறுப்பாளர்கள் அறிவொளி, ராஜமாணிக்கம், திருவையாறு பொறுப்பாளர்கள் ராஜசேகரன், கிருஷ்ணமூர்த்தி, ஒரத்தநாடு பொறுப்பாளர்கள் சகாயராஜ், முருகன், பட்டுக்கோட்டை பொறுப்பாளர் மூக்கையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில், நெல்கொள்முதல் பணியில் நிலவும் காலிப்பணியிடங்களால் முழுவீச்சில் பணி நடக்கவில்லை. இரண்டு கொள்முதல் நிலையங்களுக்கு ஒரு கொள்முதல் அலுவலர் என்னும் நிலையில், முன்பு பணிபுரிந்து வந்தனர். ஆனால், தற்போது இந்நிலை மாறி 10 கொள்முதல் நிலையங்களுக்கு மேல் ஒரு கொள்முதல் அலுவலர் பணிபுரிகின்றனர்.

இதனால், உரிய காலத்தில், விரைவாக கொள்முதல் பணி நடப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் அவதிப்படுவதோடு, தேவையற்ற பிரச்னைகளும் ஏற்படுகிறது. வெளிமாவட்டங்களில் பணியாற்றும் கண்காணிப்பாளர்களை இடமாற்றம் செய்து, உள்ளூரில் பணி வழங்க வேண்டும். குடோன்கள், திறந்தவெளி சேமிப்பு நிலையங்கள், கொள்முதல் நிலையங்களில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

கொள்முதல் பணியாளர்களுக்கு மிகக்குறைந்த சம்பளம், சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு எடை வைத்து, லாரியில் ஏற்றும் வரை மூட்டை ஒன்றுக்கு, ஒரு ரூபாய் 87 காசு வழங்கப்படுகிறது. இது போதாது. எனவே, கொள்முதல் பணியாளர்களுக்கு குறைந்தபட்சம் மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பளம், சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு எடைக்கூலி, ஏற்றுக்கூலி ஆகிய இரண்டும் சேர்த்து,

தனியாருக்கு இணையாக மூட்டைக்கு 10 ரூபாய்க்கு குறையாமல் கூலி வழங்க வேண்டும். மேலும் கொள்முதல் பணியாளர்களை, பணி நிரந்தரப்படுத்த வேண்டும் என பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.